17 மே 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH பாஸ்கா காலத்தின் 6 ஆம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்: **நிறைவான வாழ்வு**



## இவ்வாறு இருக்க வேண்டும் அல்லது இருக்கக் கூடாது

அன்பு இல்லாத உலகத்தை உங்களால் கற்பனை செய்து பார்க்க இயலுமா? கிறிஸ்துவத்துக்கு முன் இந்த உலகம் கருணைக்கும், மனித மாண்புக்கு பெரிதாக பாடுபடவில்லை. உரோமை அரசாட்சிக் காலத்தில் மனித குலத்தில் கால்பங்கு மக்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். சமத்துவத்தைப் பற்றி புனித பவுல் அறிவித்த கிறிஸ்துவ புரட்சியினால், அடுத்த இரண்டு நூற்றாண்டுகளில் மேற்கத்திய நாடுகளின் மனநிலை மாறியது. “இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும் அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்”(கலாத்தியர் 3:28) இருப்பினும் இது மிக மிக மெதுவாக செயல்பட்டது.

நான் அன்பை கிறிஸ்துவத்துடன் ஒப்பிட்டுள்ளேன்; ஏனென்றால் நம்முடைய நம்பிக்கை இதைத் தான் கற்பிக்கின்றது. அன்பு கடவுளிடமிருந்து வருகிறது.. அன்பே கடவுள் (1 யோவான் 4:16) உலகில் கிறிஸ்துவ நம்பிக்கை வந்ததால், போர், வறுமை மற்றும் அநீதி இல்லாத உலகமாக தானாகவே மாற்றம் கண்டுவிடும் என்று நினைப்பது அறிவீனம். ஆனால், கிறிஸ்துவர்கள் தாங்கள் எவ்வாறான மனிதர்களாக இருக்கப்போகிறோம் என்பதை அவர்களால் தேர்ந்தெடுக்க முடியும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. அது என்னவென்றால், எவ்வாறு இருக்கப்போகிறேன் அல்லது இருக்க மாட்டேன்.. கிறிஸ்துவைப் போல். இயேசு கூறுகிறார்: “நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்” (யோவான் 14:15) கிறிஸ்துவை அன்பு செய்தால், நாம் தூய ஆவியால் வழிநடத்தப்பட அவரை அனுமதிக்க வேண்டும்.- ஆவியின் அருள் நமக்கு வலுவூட்டுகிறது. வழி நடத்துகிறது, தூண்டுகிறது மற்றும் கிறிஸ்துவோடு ஒன்றித்திருக்க நமக்கு வழிசெய்கிறது. தூய ஆவி நம்மை வழிநடத்தாவிட்டால், உண்மையான இயேசுவை, காணமுடியாது, உங்களுக்கும் எனக்கும், இந்த உலகத்திற்குமான அவரின் அன்பை நம்மால் அனுபவிக்க முடியாது.

அன்புள்ள சகோதர சகோதரிகளே! இயேசுவே உண்மை; ஆனால், அவரை இந்த உலகம் அறிந்துகொள்ளவில்லை(யோவான்1:10) ஆம், இந்த உலகில் அன்புக்கும் நம்பிக்கைக்கும் அவரே மிகப்பெரிய காரணம். இன்னும் உலகில் பலர் கிறிஸ்துவின் நற்செய்திக்கு கண்களை மூடிக்கொண்டிருக்கிறார்கள், இருந்தபோதும், கிறிஸ்து செய்ததைப் போல் நாமும் நம்முடைய பணியை அனைவருக்கும் தொடர்வோம். எனினும், இதை நம் சொந்த பலத்தால் செய்ய முடியாது, ஆனால் அவரோடு இணைந்திருந்தால் செய்யமுடியும். திருப்பலியை நிறைவேற்றும் குருவானவர் நாம் உட்கொள்ளப்போகும் திரு உணவான அப்பத்தையும் இரசத்தையும் உயர்த்தி “இவர் வழியாக, இவரோடு, இவரில்” என்று கூறும்போது, நாம் அனைவரும் நம்பிக்கை மற்றும் அன்பின் தூதுவர்களாக, பயமின்றி துணிவோடு சாட்சிகளாகத் திகழ, இயேசுவே அவருடைய உடலில் நம்மை இணைக்கின்றார்; வலுவுட்டுகின்றார். ✝

**தூய ஆவியானவர் நம்மை ஒரு தாயைப் போல வழிநடத்துகிறார்.**

– புனித ஜோன் வியான்னி

### இன்றைய வாசகங்கள்:

திருத்தூதர் பணிகள்: 8: 5-8,14-17

திருப்பாடல்: 66:1-7, 16-20

1 பேதுரு: 3: 15-18

யோவான்: 14: 15-21

### வாரம் ஒரு வசனம்

கிறிஸ்துவை அன்பு செய்வது தூய ஆவியால் வழிநடத்தப்பட வேண்டும்

INTERNAL CIRCULATION ONLY
BUL 20/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்


*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***
*2020 மே (வைகாசி) மாதத்தின் கருப்பொருள்:*
***நிறைவான வாழ்வு***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** உயிர்ப்புக் காலம் 6 ஆம் ஞாயிறு 16 - 24 மே 2020
தி.பணி 8 :5-8, 14-17 தி.பா: 66: 1-3, 4-5, 6-7, 16-20 1 பேதுரு 3: 15-18 யோவான் 14: 15-21
**“ அனைத்துலகோரே ! கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள் ! ” - தி.பா 66**

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 10 மே) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| பங்கு காணிக்கை | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| **மொத்த தொகை:** | **RM16,440.00** | **RM12,318.00** | **RM1410.00** |

***உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி.***
***இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!***

**நன்கொடை / காணிக்கைகள்**
**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1)பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

1.வங்கியின் பெயர்: **Public Bank Berhad**
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: **Church of Visitation**
3.வங்கிக் கணக்கு எண்: **3121194612**

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
**(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்**
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன்(017-615 8961) அல்லது பென்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.** serembanvisitation@gmail.com

கொவிட் 19 முன்னிட்டு அடுத்த அறிவிப்புகள் வரும் வரை திருப்பலிகள் ஆலயத்தில் நடைபெறாது.

பங்கு அலுவலகம் திறந்திருக்கும்: 18-05-2020 முதல் 24-05-2020 (ஞாயிறு)
அலுவலக நேரம்: காலை 8.00 - பகல் 1.00 வரை

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்***
(1) மரியா லாய் ந்யெக் யின் (இறப்பு: 6/5/20)
(2) மைக்கல் தோமஸ் (இறப்பு 12/5/20)
(3) கொரீன் ஹெர்மொய்ன் (இறப்பு: 6/5/20)
(4) பிரிட்ஜெட் கான் கியு (இறப்பு: 11/5/20)
(5) வல்லியம் பிரான்சிஸ் (இறப்பு: 6/5/20)
***முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!***

➢ ***நம்பிக்கையில் நிலைத்திருங்கள்***
அன்புள்ள சகோதர சகோதரிகளே!, நடமாட்டக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டபின் இதுவரை நம்முடைய பங்கில் 12 இறப்புகள் நிகழ்ந்துள்ளது. இந்த துயரமான நேரத்தில் உறவினர்கள் வந்து இறுதி மரியாதை செலுத்தமுடியாமல், வெகுசிலர் மட்டுமே இருந்து இறுதிபிரியாவிடை தரமுடிந்தது. இது மிகவும் வருத்தமானது. இன்னும் பலர் பொருளாதார நெருக்கடி, உடல் நலக்குறைவு ஆகியவற்றால் துயரத்துள்ளாகி இருப்பீர்கள். இதுபோன்ற துன்பம் மற்றும் சவால்கள் நிறைந்த இந்த நேரத்தில் ஆண்டவரின் வார்த்தை நமக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது.***“வலிமை பெறு; துணிவு கொள்; அஞ்சாதே, அவர்கள் முன் நடுங்காதே; ஏனெனில் உன் கடவுளாகிய ஆண்டவரே உனக்கு முன் செல்பவர்; அவர் உன்னை விட்டு விலக மாட்டார்; உன்னைக் கைவிடவும் மாட்டார் ‘ (இணைச்சட்டம்: 31:6)***
உங்களுடைய எல்லா முயற்சிகளிலும் இந்த இறைவார்த்தைகள் உங்கள் நினைவில் இருந்து, ஆறுதலும், வலிமையும் தரட்டும். நீங்கள் தனித்திருப்பதில்லை. நம்பிக்கையில் நிலைத்திருங்கள். அனைத்து சவால்களையும் வெற்றிகொள்ள உங்கள் நம்பிக்கை உங்களை வழி நடத்தும். நலமோடு இருங்கள்.

***ஆசீரும் அமைதியும் எப்போதும் உங்களோடு இருப்பதாக! அருட்பணி: சேவி மற்றும் கென்னத்***

➢ **நடமாட்டக் கட்டுப்பாட்டை முன்னிட்டு, இறப்பு சடங்குகளுக்கான வழிமுறைகள்.**
(1) வீடுகளில் அல்லது பார்லரில் ஏழு நாள் செப வழிபாடு நடைபெறாது. குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே தனிப்பட்ட வகையில் செப வழிபாட்டை நடத்திக்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான செப புத்தகங்கள் பங்கு/அதிச விலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.. இறப்பு இல்லத்தில் நெருங்கிய உறவினர்கள் மிக குறைவான நேரமே இருக்க முடியும்.
(2) விழிப்பு செபங்கள் பங்கு குருவானவரால் இல்லத்திலேயே நடத்தப்பட வேண்டும். இது நம்முடைய நாட்டின் நடமாட்டக் கட்டுப்பாட்டு வழிமுறைகளின்படி இறப்பு இல்லத்தில் அதிகமான நபர்களைக் கட்டுப்படுத்த உதவும். மேலும் இதனால் நம்முடைய ஆலயமும் எந்த வழிபாட்டுக்கும் திறந்திருக்காது.
(3) இந்த நேரத்தில் பிற சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் கடைப்பிடிப்பது அவசியம். (இடைவெளியைக் கடைப்பிடித்தல்)

➢ ஏப்ரல் மாதத்தில் முன்பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் வேறு தேதிகளுக்கு மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

➢ தினமும் இணையத்தின் வழி திருப்பலிகளில் பங்கெடுக்க: ***www.Tv.ArchKL.org***
2020 மே 16 - 21 வரை

| | | | | |
|---|---|---|---|---|
| சனிக்கிழமை: | 16-05-2020: | மாலை | 6.00 | ஆங்கிலம் |
| ஞாயிறு | 17-05-2020 | காலை | 7.30 | தமிழ்: |
| | | காலை | 9.00 | மாண்டரின் |
| | | காலை | 10.30 | ஆங்கிலம் |

**செபமாலை - புதன் 20-05-2020 மாலை 7.00 மணிக்கு பேராயர் ஜூலியன் அவர்களுடன் செபமாலையில் இணைந்திருப்போம்.**